
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1096**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

**குமரன்தாஸ்**

**47**

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# ‘காலம் பதில் சொல்லும்’

## ஒளியை வழங்கும் உதயசூரியன்!

கலைஞரின் கதை வசனத்தில், 1980-இல் வெளி வந்த **‘காலம் பதில் சொல்லும்’** திரைப்படத்தில் நீண்ட வசனங்கள் கிடையாது. அதேநேரத்தில் மிகக் கூர்மையான வசனங்களைக் கொண்டிருக்கும்.

1970-களின் இறுதியிலும் 1980-களின் முற்பகுதியிலும் நடிகர் ஜெய்சங்கர் கலைஞரின் கதை வசனத்தில் தொடர்ந்து நடித்துள்ளதைக் காண்கிறோம். அதிலும் தி.மு.க.வுக்கு ஆதரவாகவும், எம்.ஜி.ஆர். ஆட்சியை விமர்சித்தும் கலைஞர் எழுதிய வசனங்களைப் பேசி, அவர் நடித்திருப்பது கவனத்துக்குரியது. ஏனென்றால், 1977-இல் எம்.ஜி.ஆர். ஆட்சியைப் பிடித்த பிறகு, திரைத்துறை முழுவதும் அவருக்குக் கட்டுப்பட்டு இருந்த காலம்.

திரைப்படத்தின் தொடக்கத்தில், கலைஞர் திரையில் தோன்றி, சில வார்த்தைகள் பேசுவார். “அருமைத் தாய்மார்களே, அன்புள்ள பெரியோர்களே, என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளே. இது ஒரு பொழுது போக்குப் படம்தான் எனினும், பொல்லாத நச்சரவு மனிதன் ஒருவன் நல்லவனைப் போல் போடுகின்ற வேஷத்தைக் களைகின்ற பணியையும் செய்கின்றது.

எத்தர்கள் எத்தனை நாட்கள்தான் ஊரையடித்து, உலையில் போட்டு உத்தமர்களைப்போல உலவிட முடியும்? உதயத்தின் கதிர்பட்டு உலகத்தைக் கவ்விய இருள் விலகுவதுபோல உண்மையின் ஒளிபட்டு பொய்மை அகல வேண்டியதுதானே முறை? நாம் விரும்புவதும்கூட அதுதானே?

உண்மை வெற்றிக்குப் பாடுபடும் உடன் பிறப்புகள் அனைவருக்கும் நான் தரும் இனிய பரிசு இது, இதயமார்ந்த பரிசு” என சிறு விளக்கம் அளித்திருப்பார்.

கதாநாயகன் காந்தன் (ஜெய்சங்கர்) அறிமுகமாகும் காட்சியில் குப்பைத் தொட்டியில் இருந்து, கருப்புச் சட்டையில் சிவப்பு வண்ணத்தில் உதயசூரியன் சின்னம் வரைந்த உடையுடன் எழுந்து வந்து நாயகி ராணியிடம் (ராதிகா) வம்பு செய்யும் ரவுடி தாண்டவனைத் தடுக்கிறான். அப்போது தாண்டவன் ‘சே குப்பைத்தொட்டி தள்ளிப்போ’ என்கிறான். அதற்கு காந்தன்,

‘குப்பைத் தொட்டிகள் குமுறி எழுந்தால், கோட்டை கொத்தளங்கள் எல்லாம் தவிடு பொடி. அதை மறந்துடாதே’ என்று சொல்கிறான்.

### உதயசூரியன் உதிக்கும்

அதேபோல இன்ஸ்பெக்டர் கண்ணனுக்கு தொலைபேசியில் அழைத்து துப்புக் கொடுக்கிறான், காந்தன். அப்போது,

**காந்தன்:** பொது நலத்துக்காக, ஒரு நியூஸ் உங்க கிட்ட சொல்லப் போறேன்.

**கண்ணன்:** சொல்லுங்க.

**காந்தன் :** ஒலிவியா ஹோட்டல் ரூம் நம்பர் 9-ல பிரபல வைர வியாபாரிகள் வந்து தங்கி இருக்காங்க.

**கண்ணன்:** கள்ளக்கடத்தல் பேர்வழிகளா?

**காந்தன்:** அவங்க கிட்ட இருக்கும் வைரங்கள கொள்ளையடிக்க, இரண்டு குண்டன்கள் திட்டம் போட்டுருக்காங்க

**கண்ணன்:** L SEE. ஒலிவியா ஹோட்டல் ரூம் நம்பர் 9. தாங்க்ஸ். ஆமா நீங்க யாரு?

**காந்தன் :** உதயசூரியன்

**கண்ணன் :** உதயசூரியனா?

**காந்தன் :** ம் ... இருளை விலக்கி ஒளியை வழங்கத் துடிக்கும் உதயசூரியன்.

**கண்ணன்:** கொஞ்சம் புரியும் படியாகச் சொல்லுங்கள்.

**காந்தன்:** சொல்லலாம். ஆனால், இப்ப இல்லை. காலம் சொல்லும் உங்களுக்குப் பதிலை... என்கிறான்.

மற்றொரு முறை, இன்ஸ்பெக்டர் கண்ணன் தொலைபேசியில், காந்தனுடன் உரையாடும் போது...

**கண்ணன்:** மிஸ்டர் உதய சூரியன், எனக்கு இவ்வளவு உதவி செய்றீங்களே காரணத்தைத் தெரிஞ்சுக்கிறலாமா?

**காந்தன்:** நான் சொல்ற இடத்துக்கு, சொல்ற நேரத்துக்கு உங்களால வர முடியும்ல?

**கண்ணன்:** நான் கண்டிப்பா சந்தித்தாகணும். காலம் பதில் சொல்லும்னு சொல்லிடாதீங்க.

**காந்தன் :** காலைல 6 மணிக்கு கிழக்கு திசையில...

**கண்ணன் :** ம்... உதயத்தைப் பார்க்கலாம். நான் உங்கள பார்க்க விரும்புறேன்.

**காந்தன் :** நியாயமான சட்டங்கள் நேர்மையான முறையில செயல்பட, இந்த உதயசூரியன் எப்பவும் உதவியா இருப்பான்... என்கிறான்.

மற்றொரு காட்சி, மாரப்பன் காந்தனிடம் வீரையாவைக் கொலை செய்யச் சொல்கிறான். அப்போது...

**மாரப்பன்:** இவன்தான் வீரையா, என் ஜென்ம விரோதி எனப் புகைப்படத்தைக் காட்டுகிறான்.

**காந்தன்:** பாவம், பார்க்கிறதுக்குப் பரிதாபமா இருக்கு. இவனுக்கும் உங்களுக்கும் என்ன சார் பகை?

**மாரப்பன்:** அது பழைய கதை. புதைக்கப்பட்ட ரகசியம்.

**காந்தன்:** புதைக்கப்பட்ட வரலாற்றுப் பெட்டகத்தையே தோண்டி எடுத்துருக்காங்க.

இந்த ரகசியத்தைத் தோண்டி எடுக்க முடியாதா?

**மாரப்பன்:** குறுக்குக் கேள்வி போடாதே. என் கொள்கையை நிறைவேற்று. வீரையாவை உலகத்தை விட்டே அனுப்பு.

**காந்தன் :** சரியான சமயத்துல, சரியான ஆளப்பார்த்து, சரியான வேலையை ஒப்படைச்சிருக்கீங்க.

**மாரப்பன் :** இதனை, இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன் கண் விடல்னு வள்ளுவர் சும்மாவா சொல்லியிருக்கார். அதனால்தான் நான் இந்தப் பணியை உங்கிட்டே ஒப்படைச்சேன்.

**காந்தன் :** பாவம் வள்ளுவர்! எல்லாரு கையிலேயும் மாட்டிக்கிட்டு படாத பாடு படுறாரு... என்று கேலி செய்கிறான்.

இறுதிக்காட்சியில், காந்தனிடம் வீரையா அவனது கடந்தகால கதையை எடுத்துச் சொல்கிறார். அதைக் கேட்டுவிட்டு, கண்ணீர் சிந்தும் காந்தன் பதில் சொல்கிறான்...

**காந்தன்:** இந்த அதிர்ச்சியான கதையை, அழிஞ்சுபோன வரலாற்றை என்கிட்ட சொல்லியிருக்கவே வேணாம்.

கடந்தகால கசப்பான நிகழ்ச்சியை, தயவு செஞ்சு மறந்துருங்க. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இதை எல்லாம் காத்துப் பணிபுரிகிற காவல் துறை அதிகாரி கண்ணனை நான் நேசிக்கிறேன். எனக்குண்டான சொத்துகள், அனைத்தையும் அவனே எடுத்துக்கிடட்டும். எனக்கு எதுவுமே வேண்டாம்பா... எதுவுமே வேண்டாம்.

**வீரையா:** சொத்து சுகத்தை நீ தியாகம் பண்ணிடலாம். முத்துச்சிப்பியைப் பிளப்பது போல, உன் தந்தையின் நெஞ்சை துப்பாக்கிக் குண்டாலே பிளந்து கொன்னானே மாரப்பன் அவனப் பழிவாங்குற பணியை, முதல்ல முடிக்க வேணாமா? பித்துப் பிடிச்சு மனம் பேதலிச்சு, நடைபிணம் போல காட்சி தர்றாளே உன்னைப் பெத்தெடுத்த தாய், அந்தத் தாயினுடைய மனம் மகிழ ‘இதோ வந்துட்டேம்மா உங்க மகன்’னு எதிரே போய் நிக்க வேணாமா? உன்னை இத்தனை நாள் பாடுபட்டு வளர்த்ததுக்குக் காரணமே, உன் தந்தையைக் கொன்னவனைப் பழிவாங்கவும், உன் தாயினுடைய வாழ்க்கையில ஒளி வழங்கவும்தான். இந்த என் லட்சியத்தை நிறைவேத்தப் போறியா இல்லையா?

**காந்தன்:** நிறைவேத்துறேன்பா. நிச்சயமா நிறைவேத்துறேன்.

**ராணி:** வேணாங்க, மலையோட போய் மோத வேண்டாங்க.

**காந்தன் :** மலை இல்ல ராணி... மாரப்பன் ஒரு மலைப்பாம்பு. அவன மன்னிக்கவே முடியாது.


**ராணி:** மறப்போம் மன்னிப்போம்ன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க

**காந்தன் :** உண்மைதான். நல்லவங்க தவறிப்போய் ஒரு குற்றத்தை செஞ்சா மறக்கலாம், மன்னிக்கலாம். ஆனால், துரோகத்த மறக்க முடியாது. துரோகிகள மன்னிக்கவும் கூடாது. அப்படிச் செஞ்சா இந்த சமுதாயமே புரையோடிப் போயிடும். அப்பா, இப்பவே நான் சூளுரை எடுத்துக்கிறேன். அந்த சூதுக்காரனின் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்துறேன். தாயின் முகத்தை மலரச் செய்கிறேன்.


**வீரையா :** நிச்சயமா வெற்றி கிடைக்கும்... என்று சொல்கிறார். சொன்னபடியே காந்தன் மாரப்பனை அம்பலப்படுத்தி, காவல் துறையிடம் ஒப்படைக்கிறான்.

இவ்வாறு, காலம் பதில் சொல்லும் திரைப்படக் காட்சியையும் கதையையும், கலைஞர் தனது வசனத்தால் சிறப்பானதாக ஆக்கியுள்ளதைக் காண்கிறோம்.

**...காட்சி விரியும்**




படங்கள் உதவி : ஞானம்



> “காலம் பதில் சொல்லும் திரைப்படக் காட்சியையும் கதையையும், கலைஞர் தனது வசனத்தால் சிறப்பானதாக ஆக்கியுள்ளதைக் காண்கிறோம்.”

## திராவிடப் பாதை நூல் திறனாய்வு!




திராவிட இயக்கம் ஒரு சமூக - பண்பாட்டு இயக்கமாக, எவ்வாறு ஒரு வெற்றிகரமான அரசியல் கட்சியாக, திராவிட முன்னேற்றக் கழகத்தில் எப்படி மாறியது என்பதைப் பற்றிய விரிவான வரலாற்று ஆய்வு நூல் விக்னேஷ் ராஜாமணி எழுதிய ‘The Dravidian Pathway (திராவிடப் பாதை)’. 1949-ல் தி.மு.க. தொடங்கப்பட்டது முதல் 1967-இல் அக்கட்சி அடைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் வெற்றி வரையிலான காலத்தை, இந்த நூல் முதன்மையாக ஆராய்கிறது. ஒரு சமூக இயக்கம் எவ்வாறு தேர்தல் அரசியலுக்கு ஏற்றவாறு, தன்னைத் தகவமைத்துக் கொண்டது என்பதை, அற்புதமாக விளக்குகிறது இந்நூல்.

தி.மு.க.வின் வளர்ச்சிக்கு படிப்பகங்கள் எவ்வாறு உதவின என்பதையும், தரவுகளுடன் விளக்குகிறார் நூலாசிரியர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தால் பெற்ற அரசியல் அதிகாரத்தையும், ஆதாரங்களுடன் விளக்கியிருக்கிறார். அரசியல் மீது ஆர்வம்கொண்ட இன்றைய இளம் தலைமுறையினர், அவசியம் வாசிக்க வேண்டிய இந்த நூல், அண்ணா நூற்றாண்டு நூலக கருத்தரங்கக் கூடத்தில் இன்று (01.02.2026) மாலை 5.45 மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சியில், வெளியிடப்பட்டு திறனாய்வு செய்யப்படுகிறது.

ஆய்வாளர் வீ.எம்.எஸ். சுபகுணராஜன், பேராசிரியர் எம்.விஜயபாஸ்கர், திராவிடர் கழகப் பிரச்சார செயலாளர் அருள்மொழி, திட்டக்குழுச் செயல் துணைத்தலைவர், பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் ஆகியோர் திறனாய்வு செய்கின்றனர். நூலாசிரியர் விக்னேஷ் ராஜாமணி அவர்களுடன், கலந்துரையாடலும் நடைபெறுகிறது.

விரும்புவோர் செல்க...

## ஃப்ளாஷ்பேக்




### தலைவர் பிறந்த நாளில் பெற்ற வாழ்த்து!



எம்.இ.தேவநிதி

1990-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 67-வது பிறந்தநாள் விழா, கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. அந்த சமயத்தில், கழகத்தின் தொண்டர் அணியில் செயல்பட்டு வந்தேன். தலைவரிடம் வாழ்த்து பெறுவதற்காக, எட்டு மாத கர்ப்பிணியாக இருந்த என் துணைவியார் சந்தானலட்சுமியை அழைத்துச் சென்று வாழ்த்து பெற்றபோது எடுத்த படம். ஆண் குழந்தை பிறந்ததும், அன்றைய துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் நாஞ்சில் மனோகரன் அவர்கள், என் மகனுக்கு ‘கருணாநிதி’ எனப் பெயரிட்டு வாழ்த்தினார்.

– **எழும்பூர் எம்.இ.தேவநிதி, தலைமைக் கழகப் பேச்சாளர், புரசைவாக்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### இல்லாமை ஒழிக்க இணைய வேண்டும்!

1967-ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் தேதி, முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா, அன்றே அரசு ஊழியர்களிடையே அறிவுரையாற்றினார். ‘தமிழ்நாட்டின் அரசு நிர்வாகத்தின் சிறப்பு ஒரு துளியும் மங்காமல் செயல்படுவீர்கள். நாட்டிலிருக்கும் ஏழ்மை, இல்லாமை, போதாமையை அகற்றுவதில் எங்களுடன் நீங்களும் சேர்ந்து துணை நிற்க வேண்டும்’ என்று கேட்டுக்கொண்டார். அன்று, தமிழ்நாடெங்கும் மகிழ்ச்சி விழா கொண்டாடப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131